பொதுவாக இந்தியாவில் ஒரு மாநிலத்தில் வாங்கப்பட்ட வாகனங்கள், ஒரு மாநிலத்தைச் சேர்ந்தவர் வைத்திருக்கும் வாகனம் சொந்த உபயோகத்திற்காக எந்த மாநிலத்திலும் உபயோகப்படுத்தப்படலாம். ஆனால் தமிழ் நாட்டில் வரி விதிப்பை ஏய்ப்பதற்காக, அண்டை மாநிலமான பாண்டிச்சேரியில் தமிழ்நாட்டைக் காட்டிலும் குறைந்த வரி விகிதம் இருக்கிறதென்ற காரணத்திற்காக, அங்கேயே வாங்கி, அங்கேயே பதிவு செய்துகொண்டு, இங்கு உபயோகப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அதனால் நமக்கு வரி வசூலில் பெரும் இழப்பு ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. இதைத் தவிர்ப்பதற்காகத்தான் நாம் நுழைவு வரி முறையைக் கொண்டு வந்திருக்கிறோம். இது சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றது. இருப்பினும் அண்டை மாநிலமான, பாண்டிச்சேரி மிக அருகாமையில் இருக்கிற காரணத்தால், அங்கே பதிவு செய்துகொண்டு, தொடர்ந்து அங்கேயே புதுப்பித்தும்கொண்டு, இங்கே உபயோகப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். இதைத் தடுப்பதற்காக துறை ஆய்வு செய்து, தகுந்த சட்டமுன்வடிவை நிறைவேற்றி அமல்படுத்தும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆ. சுப்புரத்தினம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவ்வாறு விதிக்கப்படும் வரியின் மூலம் தமிழ்நாட்டுக்குக் கிடைக்கும் ஆண்டு வருவாய் எவ்வளவு என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வ. சத்தியமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1990-ம் ஆண்டுதான் இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டது. 1990-ம் ஆண்டு 0.55 கோடிதான் நமக்கு வருவாய் ஈட்டப்பெற்றது. அதற்குப் பிற்பாடு, 1990-91-ஆம் ஆண்டில் 19.67 கோடியும், 1991-92-ஆம் ஆண்டில் 24.84 கோடியும், அதை அடுத்து 1992-93-ஆம் ஆண்டில் 42.07 கோடியும், 1993-94-ஆம் ஆண்டில் 69.51 கோடியும், நடப்பு ஆண்டில் பிப்ரவரி மாதம்வரை 91.01 கோடியும், ஆக மொத்தம் 247.65 கோடி ரூபாய் நுழைவு வரி மூலம் தமிழகத்திற்கு கிடைக்கப்பெற்றிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 114, திரு. சி. குழந்தைவேலு, மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்.

114—

நார்த்தமலையில் கிரானைட் தொழிற்சாலை அமைத்தல்

*** 25351—**திரு. சி. குழந்தைவேலு:

மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் தொகுதி, நார்த்தமலையில் கிரானைட் தொழிற்சாலை அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

புதுக்கோட்டை மாவட்டம், நார்த்தமலைப் பகுதியில் தமிழ்நாடு கனிம நிறுவனம் மூலம் கிரானைட் தொழிற்சாலை நிறுவும் திட்டம் எதுவும் தற்போது அரசிடம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11.00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவையின் முன்அனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. சி. குழந்தைவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 25-3-1995 அன்று புதுக்கோட்டை மாநகருக்கு வருகை புரிந்து நம்முடைய தமிழக முதல்வர் அவர்கள், காவிரித் தாய் அவர்கள் 108 கோடி ரூபாய்க்கு நலத் திட்டங்களை ஏழை எளிய நலிந்தவர்களுக்கு வழங்கி, என்னுடைய குளத்தூர் தொகுதி மக்களின் குடிநீர் பிரச்சினையைத் தீர்த்து வைத்த, காவிரி தந்த காவிரித் தாய் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு என் சார்பிலும், என் தொகுதியின் சார்பிலும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். என் தொகுதியில் உள்ள நார்த்தமலையில் சுமார் 3,000 ஆண் பெண் கல் உடைக்கும் தொழிலாளர் குடும்பங்கள் கல் உடைத்து வருகிறார்கள். நார்த்தமலையில் தரமான கற்கள் கிடைக்கின்றன. அங்கே அரசின் சார்பில், கல் உடைக்கும் கிரானைட் தொழிற்சாலை அமைத்தால் அங்கு வறுமையில் வாடிக்கொண்டிருக்கும் 3,000 குடும்பங்களுக்கு வாழ்வளிப்பதுடன், அரசுக்கும் அன்னியச் செலாவணி கிடைக்க வாய்ப்பிருக்கிறது. ஆகவே அமைச்சர் அவர்கள் இதைப் பரிசீலனை செய்து, அங்கே ஒரு கிரானைட் தொழிற்சாலை அமைக்க முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு பகுதியில் கிரானைட் தொழிற்சாலை அமைக்கவேண்டுமென்று சொன்னால், கீழ்க்கண்ட சாத்தியக்கூறுகள் தேவையாக இருக்கின்றன :—

(1) தொழிற்சாலையைச் சுற்றி 50 முதல் 60 கிலோ மீட்டர் எல்லைக்குள் ஏற்றுமதிக்குத் தகுந்த தரமுள்ள கிரானைட் பாறைகள் இருக்கவேண்டும். அந்தப் பகுதியில் கிடைக்கும் கற்களுக்கு சர்வதேச அளவில் நல்ல மார்க்கெட் இருக்கவேண்டும்.

(2) தொழிற்சாலைக்குத் தேவையான அளவு தண்ணீர் வசதி மற்றும் மின்சார வசதி கிடைக்கப் பெறவேண்டும்.

(3) தொழிற்சாலைக்கு, கிரானைட் பிளாக்குகளை எடுத்துவரவும், தயாரிக்கும் கற்களை வெளியே அனுப்பவும் ரயில் நிலையம், நெடுஞ்சாலை ஆகிய போக்குவரத்து வசதி இருக்கவேண்டும்.

தமிழ்நாடு கனிம நிறுவனம் மூலம், சென்னை மணலி மற்றும் தர்மபுரி மாவட்டம் பர்கூர் அருகில் உள்ள மாதேபள்ளி ஆகிய இரண்டு இடங்களில், இத்தகைய வசதிகள் இருப்பதால், அங்கே தொழிற்சாலைகள் இருக்கின்றன. எனவே, உறுப்பினர் குறிப்பிடுகிற நார்த்தமலைப் பகுதியில் அப்படிப்பட்ட கனிமக் கற்கள் கிடைக்காத காரணத்தாலே, அத்தகைய தொழிற்சாலை அமைக்க வாய்ப்பில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 115, திரு. கே. முனிவெங்கடப்பன், மாண்புமிகு சமூகநலம் மற்றும் கைத்தறித்துறை அமைச்சர்.

115—

உடல் ஊனமுற்றோர்களுக்கு வேலை வாய்ப்பில் இட ஒதுக்கீடு

*** 20476**—*திரு. கே. முனிவெங்கடப்பன்:*

மாண்புமிகு சமூக நலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடல் ஊனமுற்றோர்களுக்கென வேலை வாய்ப்பில் ஒதுக்கப்பட்டுள்ள 3% இட ஒதுக்கீடு அரசுத் துறைகளில் கடைபிடிக்கப்படுகின்றனவா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) அரசு துறைகள்/அரசு நிறுவனங்களில் ஏற்படும் காலிப்பணியிடங்கள் நிரப்பப்படும் போது ஊனமுற்றவர்களுக்கு ஒதுக்கப்பட்ட 3 விழுக்காடு இட ஒதுக்கீட்டின் அடிப்படையில், அப்பணியிடங்களை நிரப்ப வேலை வாய்ப்பு அலுவலகம் மற்றும் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்திற்கு அறிக்கை அனுப்பப்படுகிறது. அவ்வறிக்கையின்